பக்கங்கள்:-32

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 13 | வியாழக்கிழமை | 28.11.2024 | அதிர்வு 118

## 3 இலட்சத்தை நெருங்கும் பாதிப்படைந்தோர் தொகை

### யாழில் மட்டும் 43 ஆயிரம் பேர்

இலங்கையில் தொடரும் பலத்த மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் இதுவரை 59 ஆயிரத்து 629 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 75 ஆயிரத்து 582 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் 05



### கொட்டும் மழை வெள்ளத்துக்கு மத்தியில்

# தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல்

தமிழீழ இலட்சியத்தை நெஞ்சினில் சுமந்து களமாடி பல வரலாற்று வெற்றிகளுக்கு வித்திட்டு வீரச்சாவடைந்த மறவர்களை - காவிய நாயகர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நேற்று தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது. 02

## காரைதீவில் வெள்ளத்தில் சிக்கியோரில் 4 மாணவர்களின் சடலங்கள் நேற்று மீட்பு







(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம், காரைதீவு – மாவடிப்பள்ளியில் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட மத்ரஸா மாணவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. நேற்று வரை 4 சடலங்கள் மீட்கப்பட்டன என்று எமது செய்தியாளர் தெரிவித்தார். இந்தத் தேடுதலில் மேலதிகமாக 05




இலங்கையில் எச்.ஐ.வி. (எயிட்ஸ்) தொற்று வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு எச்சரித்திருப்பது குறித்து செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதன் பரவல் பொதுமக்களிடைய ஒரு விகிதத்துக்கு குறைவாக இருந்தாலும் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மற்றும் திருநங்கைகளிடையே பாதிப்பு விகிதம வேகமாக அதிகரித்து வருவதாக தேசிய தொற்றுநோயியல் பிரிவின் இயக்குனர் சிறப்பு மருத்துவர் விந்தியா குமாரபேலி தெரிவித்திருக்கின்றார்..

மேலும், பாதிக்கப்பட்டவர்களில் 15 வீதமானவர்கள் 15முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகள் என்றும் மருத்துவர் விந்தியா குமாரபேலி சுட்டிக்காட்டுகின்றார்.

2021ஆம் மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் மாத்திரம் சுமார் 350 பேர் எய்ட்ஸால்பாதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அந்த தொகை 694 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். 05

# தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொட்டும் மழைக்கு மத்தியிலும், இயற்கை இடர்பாடுகளைத் தாண்டியும் திரண்ட மக்கள், தமிழினத்தின் விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவில் கொண்டு மழைநீருடன் கண்ணீர் கலக்க உணர்வுபூர்வமாக அஞ்சலி செய்தார்கள்.

வடக்கு, கிழக்கில் 25 இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் நேற்று மாலை 6.05 இற்கு மணியோசை எழுப்பப்பட்டு - 6.06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு - 6.07 இற்குச் சுடரேற்றப்பட்டு மாவீரர்கள் நினைவேந்தப்பட்டனர்.













# மழையுடனான வானிலையால் ரயில் போக்குவரத்து பாதிப்பு

## ரயில்வே திணைக்களம் தகவல்

மழையுடனான வானிலை காரணமாக ரயில் போக்குவரத்து தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மார்க்கத்தினூடான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, நேற்று முற்பகல் கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த உதயதேவி ரயில் சேவை இரத்து செய்யப்பட்டது.

இதேவேளை, மண்மேடு சரிந்து வீழ்ந்ததால் மலையக மார்க்கத்தினூடான ரயில் போக்குவரத்து நானுஓயா வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் பல பகுதிகளிலும் உள்ள குறுக்கு வீதிகளில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# நீதியரசர்களை நியமிக்காமை தொடர்பான மனு; ரணிலை பிரதிவாதியாகப் பெயரிட அனுமதி

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான நீதியரசர்களை நியமிக்காமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாகப் பெயரிடுவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி சேனக வல்கம்பாயவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று ஜனக் டி சில்வா மற்றும் மகிந்த சமயவர்த்தன ஆகிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் ஆராயப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட்டு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி இதன்போது நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய, எதிர்ப்புக்கள் இருக்குமாயின் 4 வாரங்களுக்குள் அதனை முன்வைக்குமாறு பிரதிவாதியான ரணில் விக்கிரமசிங்கவிற்கு நீதியரசர்கள் குழாம் அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு மீதான அடுத்த விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# வட்டுவாகல் பாலத்தில் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட மோ. சைக்கிள்

## அதிஷ்டவசமாக உயிர் தப்பிய நபர்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தினூடாகப் போக்குவரத்துத் தடையை மீறிச் சென்ற நபரின் மோட்டார் சைக்கிள் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. எனினும், மேற்படி நபர் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சிரி 100 ரக மோட்டார் சைக்கிளில் சென்றவரின் மோட்டார் சைக்கிள் வட்டுவாகல் பாலத்தைக் கடக்க முற்பட்டபோது வெள்ள நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வட்டுவாகல் பாலத்தினுடாகச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது எனக் கடற்படையினர் கூறிய போதும் அதனைப் பொருட்படுத்தாது மேற்படி நபர் சென்று பாலத்தைக் கடக்க முற்பட்டுள்ளார்.

அப்போது அந்தப் பாலத்தை மேவி நீர்வரத்து அதிகமாகக் காணப்பட்டதால் மோட்டார் சைக்கிள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அப்போது மேற்படி நபர் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே தண்ணீருக்குள் விழுந்ததால் அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், அவரைக் காப்பாற்றியுள்ளனர். இருப்பினும் மோட்டார் சைக்கிள் வெள்ள நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் போக்குவரத்து தற்காலிகமாக பாதுகாப்புக் கருதி தடை செய்யப்பட்டுள்ளது என்றும், பொது மக்கள் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறும் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





## வெள்ள அனர்த்த நிலை தொடர்பாக

# யாழ். மாவட்ட அரச அதிபருடன் இளங்குமரன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமையில் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன், மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனுடனும், துறைசார் திணைக்கள அதிகாரிகளுடனும் நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன்,

"தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புக்கு வடிகால்கள் சிறந்த நிலையில் இல்லாமைதான் காரணமாகும்.

நாம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புக்களைப் புத்திஜீவிகளுடன் நேரடியாகச் சென்று ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக யாழ். நல்லூர் மற்றும் தென்மராட்சி பகுதிகளில் முறையான வடிகாலமைப்புக் கட்டமைப்புச் செயற்பாடுகள் இல்லாமையால்தான் அந்தப் பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதனை நாம் நேரில் கண்டறிந்தோம்.

எதிர்வரும் காலங்களில் யாழ். மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாத வகையில் பல துறைசார்ந்தவர்களின் ஆலோசனைகளையும் பெற்று குறிப்பாக சாதாரண மக்களின் கருத்துக்களையும் கூட உள்வாங்கி சிறந்த முறையில் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கும் நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்." - என்றார்.

தற்போது அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர் ஆராய்ந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் வி.சகாதேவனும் கலந்துகொண்டார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர்கள், மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.









# இலங்கையின் டீசல் இறக்குமதி ஒப்பந்தத்தை சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்க அனுமதி

சிங்கப்பூரின் பி.பி. எனர்ஜி நிறுவனத்திற்கு எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு இலங்கைக்கான டீசல் வழங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்து பெறப்பட்ட விலை மனுக்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதி முதல் அடுத்த வருடம் ஜுன் மாதம் 14ஆம் திகதி வரையிலான 6 மாத காலத்திற்கு 4 கப்பல் டீசல் தொகையை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்திற்காகச் சிங்கப்பூரின் பி.பி. எனர்ஜி நிறுவனம் விலை மனுவைச் சமர்ப்பித்தது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட கொள்முதல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்படி ஒப்பந்தத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.





# எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு தாழ் நிலப்பகுதி மக்களுக்கு எச்சரிக்கை

கெசல்கமுவ ஓயா, யான் ஓயா, மல்வத்து ஓயா, அத்தன கலுஓயா மற்றும் களனி கங்கை ஆகியவற்றின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதன் காரணமாக எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் சீதாவக்கை, தொம்பே, ஹோமாகமை, கடுவலை, பியகமை, கொலன்னாவை, கொழும்பு, வத்தளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சில இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடும் என நீர்ப்பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

நிலவும் சீரற்ற காலநிலையினால் நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள 73 நீர்த்தேக்கங்களில் 37 நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி நீர்த்தேக்கங்கள் கொள்ளளவில் 77 சதவீதத்தை எட்டியுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் பெய்த கடும் மழை காரணமாக நோட்டன்பிரிட்ஜ் மற்றும் விமலசுரேந்திர நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர, மேல் கொத்மலை நீர்த் தேக்கத்தின் 3 வான் கதவுகள் நேற்று காலை முதல் திறக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் மழை பெய்யும் பட்சத்தில் ஏனைய வான் கதவுகள் சுயமாகத் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நீர்த்தேக்கத்தின் தாழ் நிலப்பகுதிகளிலுள்ள மக்கள் மற்றும் கொத்மலை ஓயாவிற்கு இருமருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறைந்த கல்வியறிவு கொண்ட இளம் சமூகத்தில் கையடக்கத் தொலைபேசி பாவனை, புதிய தொழில்நுட்பம், போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமை போன்றவையே எச்.ஐ.வி. தொற்று வேகமாக அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் என விசேட வைத்திய நிபுணர் டாக்டர் விந்தியா குமாரபேலி தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள் எச்.ஐ.வி. வேகமாக பரவும் மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நிலைவரப்படி, சுமார் 5,000 எச்.ஐ.வி-யால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 3,500 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தேசிய தொற்று நோயியல் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நோய்த் தொற்றின் ஆபத்துக் குறித்து இளம் சமுதாயத்தின் மத்தியில் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறுவோமேயானால் நாடு விரைவில் விபரீதமான - விநோதமான - சிக்கல்களையும் நெருக்கடிக்களையும் எதிர்கொள்ளும் என்பது திண்ணம்.

## 3 இலட்சத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 12 ஆயிரத்து 970 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 682 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் அடை மழையால் இரணைமடுக் குளத்தின் 14 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை - நொச்சிமோட்டை பாலம் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் வெள்ளத்தால் முற்றாக மூழ்கியுள்ளன.

## காரைதீவில் வெள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் பங்கேற்றுள்ளதுடன் தன்னார்வ இளைஞர் குழுவினரும் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட உழவு இயந்திரமும் மீட்கப்பட்டது.

நேற்று வரை 4 மாணவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

முகமட் ஜெசில் முகமட் சாதீர் (வயது - 16), பாறுக் முகமது நாஸிக் (வயது 15), சஹ்ரான் (வயது 15), அப்னான் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

தஸ்ரிப், யாசீன் ஆகிய மாணவர்களையும், உழவு இயந்திரத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோரையும் மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர்.

மேலும், சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் எம்.ரி.சபீர் அகமட்டின் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் சடலங்கள் மீதான மரண விசாரணையை மேற்கொண்ட பின்னர் மேற்படி சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.


இதேவேளை, காணாமல்போன தஸ்ரிப் என்ற மாணவனின் பாடசாலை புத்தகப்பைமீட்புக்குழுவினரால்நேற்றுகண்டெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நிந்தவூரில் இருந்து சம்மாந்துறை நோக்கி 13 பேருடன் சென்ற உழவு இயந்திரமேகாரைதீவு-மாவடிப்பள்ளியில்வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டது.

இதன்போது நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியிலிருந்து சம்மாந்துறைக்கு விடுமுறையில் சென்ற 5 மாணவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர். 6 மாணவர்களும், உழவு இயந்திரத்தின் சாரதியும், உதவியாளரும் என 8 பேர் நீரில் மூழ்கி காணாமல்போயிருந்தனர்.

சம்மாந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களே காணாமல் போயிருந்தனர்.

காணாமல்போயிருந்த 8 பேரில் நால்வர் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர். ஏனைய நால்வரையும் தேடும் நடவடிக்கை தொடர்கின்றது.






# ஆலயப் பூசகரைக் கட்டி வைத்து தங்கச் சங்கிலி, பணம் கொள்ளை

(எஸ்.நிதர்ஷன்)

ஆலயப் பூசகரைக் கட்டி வைத்து கூரிய ஆயுதங்களால் தாக்கி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும், பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் யாழ். கைதடியில் இடம்பெற்றுள்ளது.

கைதடி ஏ – 9 வீதியில் அமைந்துள்ள கௌரி அம்மன் ஆலயத்திலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

பூசகரின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு விரைந்தபோது இரண்டு கொள்ளையர்கள் பூசகர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியையும், 45 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களுக்கு உதவிய பெண் ஒருவர் இதன்போது பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் இன்று வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தப்பிச் சென்ற இரண்டு கொள்ளையர்களையும் கைது செய்யும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



# உர மானியத்தில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு விரைவில் தீர்வு

விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 25,000 ரூபா உர மானியம் வழங்கப்படுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு விரைவில் தீர்வுகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

# மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பரவும் உண்மைக்கு புறம்பான தகவல்

மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பரப்பப்படும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை நிராகரிப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கட்டணத் திருத்த யோசனை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் மின்சார சபை அறிக்கையூடாக தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள முறைமைக்கு அமைவாக, 6 முதல் 11 வீதம் வரையிலான மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு மின்சார சபையால் முன்வைக்கப்பட்ட யோசனையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

இந்த வருடத்தின் இறுதி காலாண்டில் மதிப்பிடப்பட்ட செலவுகள், இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளின் வருமானங்கள் மற்றும் 2014 - 2022 காலப்பகுதியில் பெறப்பட்ட கடன் கொடுப்பனவுகளை கருத்திற்கொண்டு மேற்படி பிரேரணை தயாரிக்கப்பட்டதாக மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 2024 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டிற்கு அல்லாது 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கான கட்டணத் திருத்த முன்மொழிவை அனுப்புமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரியிருந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் 3 காலாண்டுகளின் முறைமையை மாற்றுவதற்கு ஆணைக்குழுவின் அதிகாரிகள் எடுத்த தீர்மானத்தால் இவ்வாண்டின் இறுதி காலாண்டில் கட்டணத்தைக் குறைப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என மின்சார சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார சபையால் அனுமதி வழங்கப்பட்ட போதிலும், அதற்கேற்றவாறு மின் கட்டணத்தை திருத்துவதற்கு ஆணைக்குழுவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமையினாலேயே 2014 - 2022 காலப்பகுதியில் கடனை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் குறித்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



பலத்த மழை காரணமாக 3 மாவட்டங்களின் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் ஹரிஸ்பத்துவ, மெததும்பர, கங்கவட கோரள, உடுதும்பர, தொலுவ, யட்டிநுவர, உடபலத, பாத ஹேவாஹெட்ட உடுநுவர தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுகள், மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல, யதாவத்த, ரத்தோட்ட, வில்கமுவ, அம்பங்க கோரள, லக்கல பல்லேகம, பல்லேபொல, நாவுல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள், நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிற்கே இவ்வாறு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதியாகச் செயற்படுக!

சரியான விடயத்தையும் பிழையான வழியில் - முறையற்ற மார்க்கத்தில் - செய்தால் அது தவறுதான்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தி அரசு எடுத்துருக்கின்ற முடிவு முறையானதா - சட்டரீதியானதா - ஒழுங்கானதா - என்று கேள்வி எழுந்திருக்கின்றது.

இடைநிறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக வரும் ஜனவரி இறுதியில் வேட்பு மனுக்களைக் கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என்றும், இது தொடர்பில் விரைவில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெறும் என்றும், அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார்.

அவரது இந்தக் கருத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு - உத்தரவுக்கு - முரணானது.

ஏற்கனவே கடந்த ஆண்டு ஆரம்பத்தில் இந்தத் தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, ஏற்கப்பட்டு, ஒரு பகுதி வாக்குச் சீட்டுக்களும் அச்சிடப்பட்ட நிலையில் அந்தத் தேர்தல் நிலுவையில் நிற்கிறது.

அந்தத் தேர்தலை ஏனைய தேர்தல்களுக்கு குழப்பம் ஏற்படாத வகையில் விரைந்து நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு வழங்கயிருக்கின்றது.

கடந்த 14ஆம் திகதி வரை பொதுத் தேர்தல் ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்த தேர்தல் ஆணையம் கடந்த 18ஆம் திகதியோடு அப்பணியைப் பூர்த்தி செய்து இருக்கின்றது.

அதன்பின்னர் தேர்தல் திணைக்கள ஊழியர்களுக்கு இரண்டு வார விடுமுறையின் பின்னர், அடுத்த தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தல் விடயங்களைக் கையாள முழு வீச்சில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

அதன்படி நவம்பர் முதல் வாரத்திலிருந்து அப்பணியில் தேர்தல் ஆணையம் ஈடுபட வேண்டும்.

அப்படி ஈடுபட்டால் டிசம்பர் இறுதியில் அல்லது ஜனவரி ஆரம்பத்தில் அந்தத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும்.

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி காலதாமதப்படுத்தாமல் தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணையத்தின் சட்டப்படியான கடப்பாடாகும்.

உயர் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்யும் விதத்தில் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் விடயத்தில் நடந்து கொண்ட குடிவரவு, குடியகல்வு ஆணையாளர் நாயகம் தொடர்ந்து விளக்கமறியலில் இருக்கின்றார். இந்தப் பின்புலத்தில் உயர்நீதிமன்ற உத்தரவை எத்தகைய முன்னுரிமை கொடுத்து பின்பற்ற வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்துக்கு நன்கு தெரியும்.

கடந்த ஆண்டு முற்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் இவ்வளவு காலத்தின் பின்னர் தேர்தலை நடத்துவது ஜனநாயக ரீதியில் தவறானது அல்லது முறையற்றது என்ற கருத்து நிலவினாலும், அது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்றுத்தான் தேர்தல் ஆணையம் எதனையும் செய்ய முடியும். செய்ய வேண்டும்.

அரசாங்கம் புதிதாக வேட்பு மனுவைக் கோரி தேர்தலை நடத்த முனைகிறது என்ற காரணத்தைக் காட்டி, ஏற்கனவே நிலுவையில் உள்ள தேர்தலை - உயர் நீதிமன்றம் விரைந்து நடத்தி முடிக்கும்படி உத்தரவிட்ட தேர்தலை - நடத்தாமல் தள்ளிப் போட முடியாது.

இது விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் தேர்தல் ஆணையமோ அரசாங்கமோ தம்பாட்டில் நடவடிக்கை எடுத்தால், அது தவறானது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையிலான தேர்தலை சட்ட ரீதியாக ரத்து செய்வதாயின் அந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்துக்கு குறைந்தது மூன்று மாதங்களாவது தேவைப்படும். அதுவரை உயர் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தாமல்தேர்தல்ஆணையம் இழுத்தடிக்க முடியாது.

அப்படி தள்ளிப் போடுவதாயின் அதற்கும் நீதிமன்றத்தின் முன்னால் போய் அனுமதி பெற்றாக வேண்டும்.

உயர் நீதிமன்றத்தை நாடி, தேர்தலை ஒத்திப் போடுவதற்கு அல்லது புதிதாக நடத்துவதற்கு அனுமதி பெறும் முயற்சி எதையும் செய்யாமல், தம் பாட்டில் அரசாங்கமும் தேர்தல் ஆணையமும் இது விடயத்தில் நீதிமன்ற உத்தரவுக்கு மாறான நடவடிக்கையை எடுக்க முயன்றால் அது பெரும் சட்ட குழப்பமாகவும் சிக்கலாகவும் மாறும் என்பது திண்ணம்.





# சென்னையில் தொடர் மழை: வீதிகளில் வெள்ளப் பெருக்கு

சென்னையில் பெய்த மழை காரணமாக வீதியோரம் தேங்கிய மழைநீரால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் கடந்த திங்கள் கிழமை காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டிருந்தது. இதன் காரணமாக அன்றைய தினம் முதலே சென்னையின் பல்வேறு இடங்களில் மழை பெய்யத் தொடங்கியது.

அதன்படி, மீனம்பாக்கம், கோடம்பாக்கம், ஆலந்தூர், ஐஸ் ஹவுஸ், நந்தனம், கிண்டி, மாமல்லபுரம், தேனாம்பேட்டை, சோழிங்கநல்லூர், கொளப்பாக்கம், மேற்கு தாம்பரம், எம்ஜி ஆர் நகர், மயிலாப்பூர் ஆகிய இடங்களில் மழை பெய்தது. இதைத் தொடர்ந்து, காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நேற்று முன்தினம் காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இதன் காரணமாக நேற்று முன்தினம் காலை சுமார் 10 மணியளவில் தொடங்கிய மழை, சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பிற்பகல் வரை பரவலாக பெய்தது.

இதனால் வீதியோரங்களில் தேங்கிய மழைநீரால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. குறிப்பாக துரைப்பாக்கம் பிரதான சாலையில் காலை முதல் மாலை வரை மழைநீர் தேங்கிய வண்ணம் இருந்தது. இதனால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர். தேங்கிய மழைநீரை அகற்றும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, வேளச்சேரி பிரதான வீதியில் முறிந்து விழுந்த மரம் உடனடியாக மாநாகராட்சி ஊழியர்களைக் கொண்டு அகற்றப்பட்டது. கிண்டி மசூதி காலனி, வண்டிக் காரன் தெரு உள்ளிட்ட பகுதிகளில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து வீசிய துர்நாற்றத்தால் அப்பகுதி வாசிகள் அவதியடைந்தனர்.

இதேபோல், சென்னையின் பல்வேறு இடங்களில் கழிவுநீர் வெளியேறியதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். காசிமேட்டில் கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இதற்கிடையே, மாலை நேரத்தில் மீண்டும் லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்ட நிலையில், மிகவும் குளிர்ச்சியான சூழல் நிலவியது.

மோசமான வானிலை காரணமாக மதுரை, திருவனந்தபுரம், கோவை, ஐதராபாத், கொல்கத்தா ஆகிய இடங்களில் இருந்து சென்னைக்கு வந்த 5 விமானங்கள் தரையிறங்க முடியாமல், நீண்ட நேரமாக வானில் பறந்து கொண்டிருந்தது. மழை சிறிது ஓய்ந்தபோது, ஓடுபாதையில் தேங்கிய தண்ணீர் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டு விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்பட்டது.

அதேபோல் சென்னையில் இருந்து ஐதராபாத், டெல்லி, செகந்திராபாத், மும்பை, லக்னோ உள்ளிட்ட இடங்களுக்கு செல்லும் 8 விமானங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றன. மழை காரணமாக, 7 வருகை விமானங்கள், 8 புறப்பாடு விமானங்கள் என 15 விமானங்கள் தாமதமாகியிருந்தன.

## விவாகரத்து வழக்கு:

# சமரச தீர்வு மையத்தில் ஜெயம் ரவி - ஆர்த்தி

விவாகரத்து கோரி நடிகர் ஜெயம் ரவி தாக்கல் செய்த வழக்கில் நடிகர் ஜெயம் ரவி மற்றும் அவரின் மனைவி ஆர்த்தி சமரச தீர்வு மையத்தில் நேற்று நேரில் ஆஜராகி பேச்சுவார்த்தை நடத்தினர்.

சினிமா எடிட்டர் மோகனின் இளைய மகன் நடிகர் ரவி. இவர் ‘ஜெயம்’ என்ற படத்தில் கதாநாயகனாக அறிமுகமானதால் ‘ஜெயம் ரவி’ என்ற புனைப்பெயருடன் பல்வேறு படங்களில் நடித்து முன்னணி நடிகர்களில் ஒருவராக உள்ளார். இவரது மூத்த சகோதரர் ராஜா திரைப்பட இயக்குநராக உள்ளார். நடிகர் ஜெயம் ரவி கடந்த 2009 ஆம் ஆண்டு சுஜாதா விஜயகுமார் என்ற திரைப்பட தயாரிப்பாளரின் மகளான ஆர்த்தியை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு இரு மகன்கள் உள்ளனர். இருவருக்கு மிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், தனது மனைவியுடனான திருமண வாழ்வில் இருந்து விலகுவதாக நடிகர் ஜெயம் ரவி அறிவித்தார்.

இந்நிலையில், மனைவியிடம் இருந்து விவாகரத்து கோரி நடிகர் ஜெயம் ரவி சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், “எனது மனைவியிடம் இருந்து தனக்கு விவாகரத்து வழங்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தங்களது திருமணம் செல்லாது என அறிவித்து அந்த பதிவை



ரத்து செய்ய வேண்டும்.” எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு, கடந்த முறை விசாரணைக்கு வந்த போது சென்னை மூன்றாவது குடும்ப நல நீதிமன்ற நீதிபதி தேன்மொழி, இருவருக்கும் இடையிலான பிரச்சினை தொடர்பாக குடுநல நீதிமன்றத்தின் சமரச தீர்வு மையத்தின் மூலமாக நேற்றே இருவரும் பேச்சுவார்த்தை நடத்த உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து இந்த வழக்கு சமரச தீர்வு மையத்தில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு வந்தபோது, ஜெயம்ரவி மற்றும் ஆர்த்தி நேரில் ஆஜராகி இருந்தார். பின்னர் இருவரிடமும் சுமார் 1 மணி நேரத்துக்கும் மேலாக மத்தியஸ்தர் பேச்சு வார்த்தை நடத்தினர். இதையடுத்து, விசாரணையை டிசம்பர் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.






# உலகின் மிக வயதான மனிதர் காலமானார்


உலகின் மிக வயதான மனிதர் ஜோன் டினிஸ்வுட் தனது 112 வயதில் காலமானார்.

நேற்று முன்தினம் அவர் வசித்து வந்த இங்கிலாந்தின் சவுத்போர்ட் பராமரிப்பு இல்லத்தில் காலமானார் என கூறப்படுகிறது.

இவர் 1912ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லிவர்பூலில் பிறந்தார்.

1942 இல் திருமணம் செய்து கொண்ட இவர் இரண்டு உலகப் போர்கள் மற்றும் இரண்டு பெருந் தொற்றுநோய்களிலிருந்து உயிர் தப்பினார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் ஜப்பானின் மேற்கு கடலோர பகுதிகளில் பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கமானது 6.4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளதுடன் இதுவரை சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை என அந்நாட்டு புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிலநடுக்கத்தால் மக்கள் பலர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மேலும், கடந்த ஜனவரி மாதம் குறித்த பிராந்தியத்தில் மிகவும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# இஸ்ரேல் - லெபனான் இடையிலான 14 மாதகால யுத்தம் முடிவுக்கு வந்தது

இஸ்ரேலுக்கும் லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகளுக்கும் இடையிலான போர்நிறுத்தம் நேற்று முதல் ஆரம்பமானது.

இதன்படி நேற்று அறிவிக்கப்பட்ட இந்த போர்நிறுத்தம், இஸ்ரேலுக்கும் ஹமாஸ/க்கும் இடையே காஸாவில் நடந்து வரும் போரினால், ஏறக்குறைய 14 மாதகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு முக்கிய படியாக கருதப்படுகிறது.

இந்தநிலையில் தற்போது வரை போர்நிறுத்தத்தை மீறியதாகக் கூறப்படும் உடனடி அறிக்கைகள் எதுவும் வெளியாகவில்லை. போர்நிறுத்த உடன்பாட்டின்படி, இரண்டு மாதங்களுக்கு சண்டையை நிறுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது.

எனினும், ஹிஸ்புல்லா ஒப்பந்தத்தை மீறினால் தாக்கப்படுவார்கள் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா தனது ஆயுதப் பிரசன்னத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், அதே நேரத்தில் இஸ்ரேலிய துருப்புக்கள் தங்கள் எல்லைக்கு திரும்ப வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான கூடுதல் லெபனான் துருப்புக்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையினர் தெற்கில் நிலைநிறுத்தப்படுவார்கள்.



அத்துடன், அமெரிக்கா தலைமையிலான சர்வதேச குழு போர் நிறுத்த இணக்கத்தை கண்காணிக்கும் என்றும் போர் நிறுத்த உடன்படிக்கையில் இணங்கிக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், போர் நிறுத்தம் நேற்று அதிகாலை 4 மணிக்கு ஆரம்பித்தது. எனினும் ஹமாஸின் பிடியில் இஸ்ரேலிய பணயக்கைதிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், காஸாவில் போரை நிறுத்தும் என்ற முன்னெடுப்புகளும் இன்னும் சாத்தியமாகவில்லை.







# யாழில் வெள்ள அனர்த்தம் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகரன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மாவட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பான கலந்துரையாடல் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் நேற்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

"வெள்ளப் பாதிப்புக்குட்பட்டுள்ள பகுதிகளை நாம் நேரில் சென்று பார்வையிட்டோம். எதிர்வரும் காலங்களில் யாழ். மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டமிட்டு கணிசமான மாற்றங்களை மேற்கொள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைய நிலையில் யாழ். மாவட்டத்தை வெள்ள அபாயத்திலிருந்து பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்." – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனும், யாழ். மாவட்ட அனர்த்த



முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜாவும் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தனர்.

மேற்படி கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், யாழ். மாவட்ட பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பனை அபிவிருத்தி சபைத் தலைவர், முப்படைகளின் அதிகாரிகள், துறைசார் திணைக்களத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.









# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 11 கடற்படை குழுக்கள்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்காக கடற்படையின் 11 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் மாத்தறை மாவட்டங்களில் கடற்படையின் நிவாரணக் குழுக்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளன.

இதனிடையே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காக விமானப் படையின் 50 பேர் 06 இடங்களில் 6 ஹெலிகொப்டர்களுடன் நிறுத்தப்பட்டுள்ளன என விமானப் படை தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு – வாழைச்சேனை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடொன்றின் கூரை மீதேறி உதவி கோரிய ஒருவர் விமானப்படை ஹெலிகொப்டரின் உதவியுடன் நேற்று பகல் பாதுகாப்பாக மீட்கப்பட்டார்.

பலத்த மழை காரணமாக 17 மாவட்டங்களை சேர்ந்த மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்ட மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் 49 ஆயிரத்து 560 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.




# சுபசுரத்தில் அபசுரமா...?

கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்

'இசைப்புயல்' ஏ.ஆர்.ரகுமான் அவர்கட்கு,
இசை அமைப்பாளர்,
சென்னை.
25.11.2024

அன்புக்குரிய சகோதரருக்கு!
வணக்கம்.

உங்கள் நலத்திற்கான அனைத்தையும் இறைவன் தந்திருப்பதால், உங்கள் குடும்பத்தின் நலன் நோக்கிப் பிரார்த்திக்கிறேன். இப்போது, அப் பிரார்த்தனைதான் முக்கியம் போலத் தெரிகிறது. 'என் நலன் வேறு, குடும்பத்தின் நலன் வேறா?' என்று கேட்பீர்கள். வேறாகிவிடக்கூடாது எனும் பிரார்த் தனையுடன்தான் இக் கடிதத்தை வரைகிறேன்.

××××××

என்னை நீங்கள் அறிய வாய்ப்பில்லை. உங்களை அறியாதார் தமிழ் உலகில் யார் இருக்கப் போகிறார்கள்?உங்களது இசையால், உங்களோடு உறவு கொண்டவன் எனும் உரிமையிலேயே இக்கடி தம் என்னால் வரையப்படுகிறது. தயவுகூர்ந்து இக்கடிதக் கருத்துகளுக்குச் சற்று செவி கொடுங்கள்!

××××××

தமிழ்த் திரைப்பட இசையுலகை உலகத்தர நிலைக்கு உயர்த்தியவர் தாங்கள். தங்களால் உயர்த் தப்பட்ட திரையிசையில் தமிழின் சாயல் இல்லாமற் போய்விட்டது எனச் சிலபேர் குற்றம் சொன்னாலும், உலகம், கிராமம் ஆகிவிட்ட இன்றைய நிலையில், உலக இசை வடிவைத் தமிழுக்கும், தமிழின் இசை வடிவை உலகிற்கும் அறிமுகப்படுத்திய பெருமை, உங்களையே சாரும் என்பதில் ஐயமில்லை.

××××××

பெரும்பாலும் கீர்த்தனை வடிவங்களாகவே இருந்து வந்த, தமிழ்த் திரைப்பட உலகின் இசையை அடுத்தபடிக்கு, இசையமைப்பாளர்களான 'மெல் லிசை மன்னர்கள்' எம்.எஸ். விஸ்வநாதன், இராம மூர்த்தி சகோதரர்கள் உயர்த்தி வைத்தார்கள். இராம மூர்த்தி பிரிந்த பின்பு அந்த இசைச் 'செங்கோல்' விஸ்வநாதன் கையிலேயே நிலைத்துப் போயிற்று.

××××××

பல ஆண்டுகள் அசைக்க முடியாதிருந்த அவரது இசைத்துறைச் 'சாம்ராஜ்யத்தைப்' பின்னாளில், வெறும் பறைச்சத்தத்தோடு, 'மச்சானைப் பார்த் தீங்களா?' என்று கேட்டு வந்த 'இசைஞானி' இளையராஜா தனதாக்கிக் கொண்டு, தமிழ்த் திரை இசையை அடுத்த படிநிலைக்கு உயர்த்தி வைத்தார்.

××××××

இளையராஜா ஆக்கித் தந்த பல புதிய இசைப் பாடல்கள், உலகெங்கும் வாழ்ந்த தமிழர்களைத் தனது அடிமையாக்கிக் கொண்டன. எப்படி விஸ்வ நாதனுக்கு 'கவியரசர்' கண்ணதாசன் வாய்த்தாரோ, அதேபோல இளையராஜாவுக்கும் 'கவிப்பேரரசர்' வைரமுத்து வந்து வாய்க்க, அவ்விருவர்தம் கூட்டில் பல பாடல்கள் பொருளாலும், இசையாலும் எழுச்சி கொண்டு, பொருளால் மண்ணையும், இசையால் விண்ணையும் தொட்டு நின்றன.

××××××

அவ்விருவரது இணைப்பால் பிறந்த பாடல்கள் உயர்ந்த அளவைவிட, அவ்விருவரது ஆணவமும் பன்மடங்கு உயரத் தொடங்கியதுதான் துரதிர்ஷ்டம். அவ்விருவரும், 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை' என்று வள்ளுவர் வகுத்துத் தந்த தமிழ் மரபுக்கு மாறாக நடக்கத் தொடங்கினர்.

××××××

ஒருவர், 'கவியரசர்' கண்ணதாசனை மனதில் வைத்துத் தன்னை 'கவிப்பேரரசு' ஆக்கிக் கொண்டார். மற்றவர் அவருக்கு மேலே போய், தன்னை 'இசைஞானி' ஆக உரைத்தும், உரைக்கச் செய்தும் உலா வந்துகொண்டிருந்தார்.

××××××

பொருள் ஈட்டலே இலட்சியம். அதற்குமுன் மானம், ஒழுக்கம், உண்மை, விசுவாசம், தன்மானம் என்பவை எல்லாம் தேவையற்ற விடயங்கள் என நினைந்து இயங்கும் சினிமா உலகம், இளைய ராஜாவின் அலப்பறைகளால், 'மூளாத் தீ போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி' நின்றாலும், தம் தேவை கருதி அவரைச் சகித்துக் கொண்டது.

××××××

அந் நிலையில்தான், இறையருள் தன் வேலை யைக் காட்டத் தொடங்கியது. இளையராஜாவின் இசைக்குழுவில், வாத்தியக் கலைஞராக இருந்த ஒருவரின் புதல்வரான நீங்களும், அக்காலத்தில் இளையராஜாவின் இசைக்குழுவில் பணியாற்றி வந்தீர்கள்.

××××××

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

தயாரிப்பாளர்களையும், இயக்குனர்களையும் இளையராஜா துரும்பென அலட்சியம் செய்வார் எனப் பேசப்பட்டு வந்த நிலையில் ஒருநாள், தன்னைத் தேடி வந்த, புகழ்பெற்ற இயக்குனர் மணிரத்தினத்தையும் இளையராஜா அவமதிக்க, அந்த இடத்திற்தான் இறைவனின் விளையாட்டு தொடங்கியது.

××××××

இளையராஜாவின் அலட்சியத்தால், மன முடைந்துபோன மணிரத்தினம், உங்களைத் தனது 'ரோஜா' திரைப்படத்தின் இசையமை–ப்பாளராய் ஆக்க, அந்த ஒரு படத்தின் மூலமே எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா ஆகியோர் ஏறிய படிகளைத்தாண்டி, அடுத்த படிநிலைக்குத் தமிழ்த்திரை உலகின் இசையை நீங்கள் திடீரெனக் கொண்டு சென்றீர்கள்.

××××××

தெற்கில் தொடங்கிய உங்களது இசையெழுச்சி, பாரதத்தின் வடக்கையும் தன் ஆற்றலின் கீழ் வீழவைக்க, உங்களது தமிழ்நாட்டுப்புகழ், பாரதப் புகழாயிற்று. அந்தப் புகழ்க்காற்று உங்களைச் சிறிதளவும் அசைக்காமல் இருந்ததைக் கண்டு, உலகமே வியந்தது. நாம் மகிழ்ந்தோம். இளைய ராஜாவைப் போல அதிகம் பேசி தனது மதிப்பைக் கெடுத்துக் கொள்ளாமல், அப்போதும் மௌனம் காத்தீர்கள்.

××××××

எத்தனை வெற்றி கிடைத்தாலும், அந்த வெற்றியை ஒரு சிறு புன்னகையால் அங்கீகரித்து நிற்கும் உங்கள் இயல்பும், பெரும்பாலும் மௌனத்தையே வார்த்தைகளாக்கும் உங்கள் போக்கும், எவரையும் நோகச் செய்யாத உங்கள் பண்பும் கண்டு, இளையராஜாவின் இசைக்கு அடிமைகளாகி நின்ற நாங்கள், உங்களது இசைக்கும், இயல்புக்கும் அடிமைகளாகிப் போனோம்.

××××××

நம்மால் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதிருந்த, உலகளாவிய 'ஆஸ்கார்' விருதினையும், ஒரே ஆண்டில் இரண்டு துறைக்காகப் பெற்று, தமிழ் இனத்திற்கு நீங்கள் பெருமை சேர்த்தீர்கள். அவ் விருதுகளைப் பெற்றுக்கொள்ள மேடைக்கு வந்தபோதும், உங்கள் முகத்தில் அதே சாந்தம்! அதே அமைதி!

××××××

வெள்ளைக்காரர்கள் சூழ்ந்திருந்த அந்தச் சபையில், அச்சமில்லாமல் ஏறி, பலரும் வியக்க, தமிழில் 'எல்லாப் புகழும் இறைவனுக்கே' எனக்கூறி நீங்கள் விருதுகளை ஏற்றபோது, தமிழர்களான எங்களின் தோள்கள் எல்லாம் பூரித்துப் போனது உண்மை.

××××××

உலகளாவிய புகழ் அடைந்த பின்பும்கூட, மௌனமும், சாந்தமும், அமைதியுமாக இருந்த உங்களின் பெருமையை என்னென்பது? எனக்குத் தெரிந்து, உங்களை வெறுத்தோ, விமர்சித்தோ, கண்டித்தோ இதுவரை எவரும் பேசியது கூட இல்லை.

××××××

கடைசிவரை நீங்கள் தெய்வமாய்ப் போற்றி நின்ற, அந்தத் தாயின் வளர்ப்புத்தான், உங்களை இத்தகைய ஒரு மாமனிதனாக ஆக்கிற்று என்று தெரிகிறபொழுது, அந்தத் தாய் வாழ்ந்த திசை நோக்கி வணங்கத் தோன்றுகிறது.

××××××

இறைவனால் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு ஆற்றல் பரிசாகத் தரப்படுகிறது. ஆற்றல் ஒன்றும் பெரிய விடயம் அல்ல. அவ்வாற்றலைத் தாங்கி நிற்கும் மனிதனின் பண்புதான் மிகப் பெரியது. இசையால் மட்டுமன்றி, பண்பினாலும் எங்களை நீங்கள் ஈர்த்து நின்றீர்கள்.

××××××

இவற்றை எல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். சென்ற வாரங்களில், உங்கள் குடும்பத்தைப் பற்றி வந்த செய்தியால் இடிவிழுந்தாற் போல் ஆனார்கள் தமிழ்த் திரையிசை இரசிகர்கள்.

××××××

செய்தியாய் வந்த அந்தச் சம்பவத்தை, மீள உரைக்கவும் என் மனம் விரும்பவில்லை. அழுக்குத் தேடித்திரியும் சில ஊடக ஜீவன்கள், வெளிவந்த அந்தச் செய்தியை, கைகால் வைத்து விரித்து தங்கள் கற்பனைக் குதிரைகளைத் தட்டி ஓட விட்டிருக் கின்றனர். அவர்களுக்கு உங்களின் மீதோ, உங்கள் துணைவியாரின் மீதோ, பிள்ளைகளின் மீதோ மட்டுமல்ல, உலகின் எந்த விடயத்தின் மீதும் அக்கறை இல்லை.

××××××

குப்பையைக் கிளறும் கோழிகள் கூட, தமது உணவைத் தேடித்தான் அதனைக் கிளறும். இவர்கள் அவற்றை விடக் கேவலமானவர்கள். அழுக்குகளைத் தேடி, விற்க ஆர்வப்படும் அசிங்கப் பிறவிகள். நல்லவர்களும், நல்லவையும் வீழ்ந்தால், மகிழும் ஈனப்பிறவிகள். சூரியன் வீழுமானாலும் இவர்கள் அதில் சுகப்படுவார்கள். அவர்களைப் பொருட்படுத்தாமல் விட்டுத்தள்ள வேண்டியதுதான்.

××××××

அண்மையில் வெளிவந்த, உங்கள் குழந்தைகளின் ஆவேசமான அறிக்கைகள், உங்கள் குடும்பத்தின் பிணைப்பையும், உங்கள் மேல் அவர்கள் கொண்ட அன்பையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

××××××

இசையால் உண்டான உறவால் ஒன்றை மட்டும் சொல்லுகிறேன். வந்த செய்தி பொய்யாய் இருக்கக் கடவது! இதுவரை காலமும் உங்கள் மௌனத்தை இரசித்திருக்கிறோம். இப்போது அந்த மௌனம், அச்சத்தையும், வெறுப்பையும் தருகிறது. தயவு செய்து மௌனத்தைக் கலைத்து வாய் திறவுங்கள்!

××××××

'நடந்தது அத்தனையும் ஒரு விளையாட்டு. நானாவது என் மனைவியையும், குழந்தைகளையும் விட்டுப் பிரிவதாவது? என் மீதான உங்களின் பிரியத்தைச் சோதித்துப் பார்த்தேன். அவ்வளவே! பிழையான பாதையில் செல்லும்படியாய், என் தாய் என்னை வளர்க்கவில்லை. நான் நினைத்தாலும், 'அல்லா' என்னைப் பிழையான வழியில் போக விடமாட்டார்' என்பதாய் உங்களிடமிருந்து ஓர் அறிக்கை வெளிவருமானால், நீங்கள் இதுவரை தந்த இசை வடிவங்கள் அத்தனையையும் விட, அது எம்மையெல்லாம் பெரிதும் ஈர்க்கும் என்பதிற் சந்தேகமில்லை.

சகோதரா! தொடர்ந்தும் இசைபட வாழுங்கள்! தயைகூர்ந்து இசை 'பட' வாழ்ந்து விடாதீர்கள்!

××××××

# கொட்டும் மழை வெள்ளத்துக்கு மத்தியில் தமிழர் தாயகத்தில் மாவீரர் நினைவேந்தல்

## சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்










தீவகம் – சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை உணர்வு பூர்வமாக மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெற்றது.

மாவீரர் பெற்றோர்கள் சாட்டி மாதா ஆலயத்தில் இருந்து அழைத்து வரப்பட்டு மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் போது மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் மல்க மாவீரர்களுக்குத் தமது அஞ்சலியை செலுத்தியிருந்தனர்.

# இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லத்தில்









(பா.சதீசன்)

முல்லைத்தீவு – இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

சரியாக மாலை 06.05மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, தொடர்ந்து அகவணக்கம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அந்தவகையில் பிரதான பொதுச் சுடரினை மாவீரர் அருணாவின் தாயாரால் ஏற்றப்பட்டது. அத்தோடு சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டன. மாவீரர்களின் உறவுகள் கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை மேற்கொண்டனர்.

தொடர்ந்து துயிலுமில்லப் பாடல் ஒலிபரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

# அளம்பில் துயிலும் இல்லத்தில்



(பா.சதீசன்)

தமிழர்களின் விடிவிற்காய் போராடிய மாவீரர்களின் கனவு பலிக்குமெனவும், தமிழர்களுக்கான விடிவு கிடைத்தே தீரும் எனவும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்குத் தாயகப் பகுதியெங்கும் கன மழையால் மிகப் பாரிய அனர்த்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டபோதும் எமது உறவுகள் மாவீரர் துயிலுமில்லங்களுக்குத் திரண்டுவந்து, எமது மாவீரச் செல்வங்களுக்கு அஞ்சலி செலுத்தியிருப்பதன் மூலம் அதனை உறுதிசெய்திருக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு – அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் விடிவிற்காக போராடிய எமது மாவீரர்களுக்காக வடக்கு கிழக்குத் தாயகப் பகுதிகள் எங்கும் எமது தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் தமது அஞ்சலியைச் செலுத்தியிருக்கின்றார்கள்.

எவ்வளவு அடைமழை கொட்டித் தீர்த்த போதும், பாரிய காற்று, வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டபோதும் எமது மாவீரச் செல்வங்களுக்காக எமது உறவுகள் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தியிருக்கின்றார்கள்.

இதன்மூலம் எமது மக்களின், எழுச்சியை, அவர்களது எண்ணங்களை நன்கு புரிந்துகொள்ளமுடிகின்றது. எமது மாவீரர்களின் கனவு பலிக்கும். தமிழர்களுக்கான விடிவு கிடைக்கும் – என்றார்.

# கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் பதற்றத்துக்கு மத்தியிலேயே நினைவேந்தல்











**(பாறுக் ஷிஹான், வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றது.

இந்த மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் திருக்கோவில் பிரதேச மாவீரர் குடும்பங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகிய தரப்புகளால் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்க புதிய அரசு இடமளிக்கும் என்று நம்பிக்கையுடன் சென்ற மக்களிடம் பொலிஸார் பாதுகாப்பு கெடுபிடிகளை விதித்து அங்கு செல்வதை தடுக்க முயற்பட்டனர். அத்துடன் அங்கு சென்ற வாகனங்களின் இலக்கங்கள் பொலிஸாரினால் பதியப்பட்ட பின்னரே மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் பொலிஸார் முரண்பட்டமையுடன் அங்கு சிறு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நடுகற்கள் இங்கு நிறுவப்பட்டிருந்தன.

# வவுனியா நகரசபை மண்டபத்தில்















**கி.வசந்தன்**

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினால் மாவீரர் தின நினைவேந்தல் நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கேணல் ஐயன், மேஜர் வாணி ஆகிய மாவீரர்களின் தாயாரினால் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்களால் மாவீரர் நினைவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில்












**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு – தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் இடைவிடாத கொட்டும் மழையிலும் மாவீரர்நாள் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

சரியாக மாலை 06.05 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

பிரதான பொதுச்சுடரினை ஒரு மாவீரரின் தந்தை சிறீதரனினால் ஏற்றப்பட்டது. அத்தோடு சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டன. மாவீரர்களின் உறவுகள் கண்ணீர்சொரிந்து உணர்வெழுச்சியுடன் நினைவேந்தலை மேற்கொண்டனர்.

# ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில்



**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்று மாலை உணர்வெழுச்சியுடன் மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன

# ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில்












(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

மாவீரர் தினத்தையொட்டி மன்னார் மாவட்ட மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்க விட்டு உணர்வு பூர்வமாக மாவீரர் நினைவு தினம் நேற்றுப் புதன்கிழமை மாலை நினைவுகூரப்பட்டது.

ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு வினால் நினைவேந்தல் ஒழுங்கு செய்யப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைக்காக தம் உயிரை தியாகம் செய்த இரு மாவீரர்களின் தந்தை ஒருவர் பொதுச் சுடரை ஏற்றி எழுச்சி பூர்வமாக நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

ஆட்காட்டி வெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் உறவினர்கள் பெருந்திரளான மக்கள் ,அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், என ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு கண்ணீர் மல்க உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# கொடிகாமம் துயிலும் இல்லம் முன்பாக












**(த.சுபேசன்)**

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக 27/11 பிற்பகல் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.



# ஈச்சங்குளம் துயிலும் இல்லம் அருகே



(கி.வசந்தன்)

வவுனியாவில் பிரதான மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள ஈச்சங்குளம் பகுதியில் 561 ஆவது இராணுவ தலைமையகம் அமைந்திருப்பதால் அதற்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் உணர்வெழுச்சியுடன மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது மணி ஒலிக்கப்பட்டு, ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தின் பிரதான ஈகைச்சுடரினை இரு.மாவீரர்களின் தாயாரான பாலசிங்கம் பாக்கியம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனையடுத்து நினைவேந்தலில் கலந்து கொண்ட மாவீரர்களின் பெற்றோர்களால் சுடர் ஏற்றி நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

கண்ணீர் மல்க, மலர் தூவி, சுடரேற்றி உணர்வு பூர்வமாக உயிரிழந்த வீரர்களுக்கும் தமது உறவுகளுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதில் பல ஆயிரக்கணக்கான பெற்றோர்கள், உறவினர்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டனர்.

# முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில்













(பா.சதீசன்)

முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் என பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டு உயரிய இலட்சியத்திற்காக தங்களின் இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் துயிலுமில்ல வளாகத்தில் நேற்று மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை ஒரு மாவீரரின் தாயாரான வள்ளிபுரம் புஷ்பமலர் அம்மா ஏற்றி வைக்க ஏனைய சுடர்கள் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலி பரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதியாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

# கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக




























கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சூழலில் அதற்கு முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நேற்று மாலை இடம்பெற்றன.

கொட்டும் மழைக்கு மத்தியில் மாலை 06.05 மணிக்கு இரண்டு மாவீரர்களின் தாய் பொது சுடரேற்ற, மாவீரர்களின் உறவுகளும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

# தேராவில் துயிலும் இல்லத்தில்









**(பா.சதீசன்)**

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், மதத் தலைவர்கள், முன்னாள் போராளிகள், பொது மக்கள் எனப் பெருந்திரளானவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் உணர்வு பூர்வமாக ஒன்று திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தேராவில் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தில் மாலை 6.05 மணிக்கு மணி யோசை எழுப்பப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டு பின்னர் பிரதான பொதுச் சுடரை மாவீரர்களான சித்தார்த்தன், 'ஈழவன், அசோக் அவர்களுடைய தந்தை யார் முருகுப்பிள்ளை குணபாலன் ஏற்றி வைக்க ஏனைய சுடர்கப் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்து துயிலுமில்ல பாடல் ஒலி பரப்பாகியது. இதன் போது மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் கலந்து கொண்டவர்கள் மிகவும் அமைதி யாக கண்ணீர் மல்க மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

# வாகரை துயிலும் இல்லத்தில்








வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பங்குபற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுதினார்.

“போராட்டங்களின் வடிவம் மாறலாம். ஆனால் இலக்கானது என்றும் மாறாது. எம்மக்களுக்கன அரசியல் உரிமைகள் கிடைக்கும் வரை எமது செயல்பாடுகள் தொடரும். இவ் இயற்கையின் சீற்றத்திலும் மக்கள் தங்களுக்கான உறவுகளை மறக்கவில்லை. மறக்கவும் மாட்டார்கள்.” – என்றார் சாணக்கியன்.

# மட்டு. தரவை துயிலும் இல்லத்தில்




**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் மாவீரர் தின நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.




# கிழக்குப் பல்கலைக்கழகத்தில்





கிழக்கு பல்கலைக்கழகத்தி லும் நேற்று மாவீரர் நாள் அனுஷ் டிக்கப்பட்டது.





# உடுத்துறை துயிலும் இல்லத்தில்



உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டு பிரதான பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. மாவீரனின் சகோதரன் பிரதான சுடரை ஏற்றி வைக்க ஏனையோர் தமது உறவினருக்கான நினைவுச் சுடர்களை ஏற்றி மலர் தூவி, மலர் மாலை அணிவித்து கண்ணீர் மல்க நினைவு கூர்ந் தனர். கொட்டும் மழையிலும் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.





# வல்வெட்டித்துறை தீருவில் திடலில்

யாழ்.வல்வெட்டித்துறை – தீருவில் திடலில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் கொட்டுக்கும் மழைக்கும் மத்தியிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்து வந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் செலுத்தினர்.











# கனகபுரம் துயிலுமில்லத்தில்


கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்தில் கொட்டும் மழைக்கு மத்தியில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் உறவுகள் கலந்து கொண்டனர்.

பொதுச்சுடரினை மூன்று மாவீரர்களின் தந்தையான சின்னத்தம்பி ராசு ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து உறவுகள் மாவீரர்களுக்கான சுடர்களை ஏற்றினர்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பங்கு கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை முழங்காவில் துயிலுமில்லத்தில் மேஜர் டாம்போவின் தந்தையாரான காசிப்பிள்ளை சுதாகர் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார்.



# சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில்
















தாயக விடுதலைப் போரில் தம்முயிரை ஈந்த மாவீரர்களை நெஞ்சிருத்திப் போற்றிப்பூசிக்கும் வகையில் பருத்தித்துறை – சுப்பர்மடத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் பெருந் திரளான மக்கள் ஒன்றுகூடி கண்ணீர் விட்டழுது உணர்வு பூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் நகிழ்வுகள் சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்தில் விசேடமாக ஒழுங்கமைக் கப்பட்டு கடந்த 21 ஆம் திகதி முதல் உணர்வுபூர்வமான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை மாலை பெருந்திரளானவர்கள் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தினர்.

தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் இறுதியாக ஆற்றிய 2008 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரை ஒலி பரப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து மிகச்சரியாக 6.05 மணிக்கு மாவீரரின் பெற்றோர் ஒருவாரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. துயிலுமில்லப்பாடல் ஒலிக்க சம நேரத்தில் மாவீரர் திருவுருவப் படங்களுக்கு அவர்களது பெற்றோர் மற்றும் உரித்துடையோரால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுப்பர்மடம் கிராமம் மற்றும் அயல் கிராமங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கான பொது மக்கள் பெருந்திரளாக கூடி நீண்ட வரிசையில் நின்று மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமான முறையில் அஞ்சலி செலுத்தியிருந்தனர். மாவீரர்களது உறவுகளின் கண்ணீர் சிந்தி எழுப்பிய அழுகுரல் அங் கிருந்தோரை நெகிழச்செய்திருந்தமை குறிப்பிடத்தக் கத்து.

# இன்றைய ராசி பலன்கள் - 28.11.2024



## மேஷம்

இன்றைய பலன்கள் திருப்தி அளிக்காது. இன்று ஆன்மீக காரியங்களில் ஈடுபடுங்கள். பக்திப் பாடல்கள் மற்றும் சொற்பொழிவுகள் கேட்பதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும். இதனால் அமைதி கிடைக்கும்.

இன்று பணியிடச் சூழல் சுமூகமாக காணப்படாது. உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் பிரச்சினை காணப்படும். இது இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிக செலவுகள் காணப்படும். அதை உங்களால் நிர்வகிக்க இயலாது.

பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சியும் மருத்துவமும் குணமடைய உதவும்.



## ரிஷபம்

இன்று மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும். அதிர்ஷ்டம் மூலம் முன்னேற்றம் கிடைக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் வீட்டில் நடைபெறவிருக்கும் ஒரு விழா பற்றி உங்கள் துணையுடன் திட்டமிட்டு ஆலோசிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். நீங்கள் பங்கு வர்த்தகங்களில் பங்கு பெறுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணலாம்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியமான மனநிலை காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக யாருக்கும்.



## மிதுனம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று உங்களிடம் அதிர்ஷ்டம் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை உங்களை நன்றாக புரிந்து கொள்வார்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியம் காணப்படும்.



## கடகம்

இன்று நீங்கள் நம்பிக்கை இழக்கும் சூழல் உருவாகும். தடைகளை சமாளித்து நன்மை காண நம்பிக்கையுடன் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்வீர்கள். அமைதியைப் பராமரிக்க இத்தகைய நடவடிக்கையை தவிர்க்க வேண்டும்.

இன்று பயணத்தின்போது பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஒவ்வாமை காரணமாக இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.



## சிம்மம்

இன்று வெறுமை உணர்வு காணப்படும். வேதனை தரும் சூழ்நிலை காணப்படும். நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு சம நிலை இழப்பீர்கள். திரைப்படம் பார்த்தல் அல்லது இசை கேட்டல் போன்ற நிகழ்சிகளின் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான நிலை காணப்படாது. அதிக வேலைகள் உங்களுக்கு வருத்தம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது நல்ல புரிந்துணர்விற்கு தடையாக இருக்கும். உங்கள் துணையுடன் நல்லிணக்கம் பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இருக்கும் பணத்தை விவேகமான முறையில் செலவழிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.



## கன்னி

இன்று உங்களுக்கு செழிப்பான நாள். நீங்கள் கடினமான பணிகளைக் கூட எளிதாக மேற்கொள்வீர்கள். அனுசரணையான அணுகுமுறை மூலம் நன்மை பெறலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் செயல்திறனில் உங்கள் படைப்பாற்றல் வெளிப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலை அதிர்ஷ்டகரமாக இருக்கும். பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் லாபம் காணலாம்.

இன்று ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.



## துலாம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் உங்கள் இலக்குகளை அடைய நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஊக்கத் தொகை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

நீங்கள் உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த அன்பான உணர்வின் மூலமாக இருவரிடையே உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்களுக்கு கணிசமான தொகை கிடைக்கும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்து வீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. திறம்பட திட்டமிட வேண்டும். இறைவழிபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணிகள் கடினமாக காணப்படும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் பாராட்டும் பெற நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உறவை பாதிக்கும் என்பதால் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

தோல் ஒவ்வாமை ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.11.2024

## தனுசு

இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகளை சமாளிக்க நேரலாம். நீங்கள் இந்தச் சவால்களை உறுதியுடனும் திடமான மனநிலையுடனும் சமாளிக்க வேண்டும். அறிவார்ந்த முறையில் சிந்தித்து செயல்பட வேண்டும்.

பனியின் போது நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் பேசும் போது அமைதியை கடைபிடிக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வலுவான பிணைப்பை உருவாக்க அனுசரித்தும் உறவிற்கான மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் கூடுதல் செலவுகள் செய்ய நேரும். வீட்டுப் புனரமைப்பு மற்றும் நிர்மாணம் குறித்த அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.

## மகரம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் முயற்சியில் எளிதாக வெற்றி காணும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் சிறப்பான வாய்ப்புகள் காணப்படுகின்றன. மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். உங்கள் திறமை மிகவும் பாராட்டப்படும். உங்கள் செயல்திறனில் உங்கள் தனித்தன்மை வெளிப்படும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் சேமிப்பும் கணிசமாக உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கும்பம்

இன்று உங்கள் வளர்ச்சிப் பாதையில் தடைகள் காணப்படும். என்றாலும் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பான அணுகுமுறை மூலம் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தின் போது கவனமாக இருக்க வேண்டும்.

அமைதியாகவும் சுமூகமாகவும் இருப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும். உங்கள் மன நிலையில் மாற்றம் வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நீங்கள் உங்கள் சம்பாத்தியத்தை அனுபவிக்கும் நிலையில் இருக்க மாட்டீர்கள்.

உங்கள் கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.

## மீனம்

இன்று திருட்டு ஏற்பட வாய்ப்புள்ளதால் கடினமான சூழ்நிலை காணப்படும். இழப்பு ஏற்படாமல் இருக்க உங்கள மதிப்பு மிக்க பொருட்களை பத்திரமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் பணிகளை கவனமுடன் ஆற்ற வேண்டும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

கோவிலுக்கு செல்வதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்குவீர்கள். இதனால் கடவுளின் அருளும் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பும் ஏற்படும்.

பண வரவு மகிழ்சிகரமாக இருக்காது. நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். நிதி விஷயத்தில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park